(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 365.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2014 யூன் 03, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2439/ '12

1.

கௌரவ புத்திக பதிரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) மாத்தறை மாவட்டத்தில் நில்வளா பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் அமைந்துள்ள இன்னாக் காட்டுப் பிரதேசத்தில் பெருந்தொகையான வயல்கள் பாழடைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணிகளை நெற்பயிர்ச்செய்கைக்காகவோ வேறு பயிரினங்களைப் பயிரிடவோ பொருத்தமான வகையில் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டம் யாது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிலத்தைச் சாகுபடி செய்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2469/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) "தெயட்டகிருல" கண்காட்சி தொடர்பாக,

(i) இற்றைவரை நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கையையும்;

(ii) அக்கண்காட்சிகள் ஒவ்வொன்றும் நடத்தப்பட்ட இடங்களையும்;

(iii) ஒவ்வொரு கண்காட்சிக்குமான செலவினத்தை வெவ்வேறாகவும்;

(iv) எதிர்காலத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கண்காட்சிகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) அனுராதபுர மாவட்டத்தில் நடத்தப்பட்ட “தெயட்டகிருல” கண்காட்சியுடன் தொடர்புபட்டதாக,

(i) அது நடத்தப்பட்ட திகதியையும்;

(ii) கண்காட்சித் திடலுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட காணியின் அமைவிடம் மற்றும் அதன் அளவையும்;

(iii) மொத்தச் செலவு மற்றும் ஒவ்வொரு அமைச்சுக்கான செலவையும்;

(iv) மூலதனப் பொருட்களுக்காகச் செலவிட்ட தொகையை மொத்தச் செலவினத்தின் சதவீதமாகவும்;

(v) எஞ்சியுள்ள மூலதனப் பொருட்கள் அல்லது கட்டிடங்களையும்;

(vi) மேற்குறிப்பிட்ட மூலதனப் பொருட்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வாறு நியாயப்படுத்தப்படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2504/ ’12

3.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஜனகபுர வித்தியாலயத்தின் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஜனகபுர வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்காக கழியும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3367/ ’12

4.

கௌரவ. பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பற்கு,— (3)

(அ) (i) அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட பாதுகாப்பு அரவணைப்பைப் பெறுகின்ற சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒரு சிறுவரின் பராமரிப்புப் பணிகளுக்கென 2013 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் உள்ள சிறுவர் தடுப்புக் காவல் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒரு சிறுவருக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iv) அப்பணத்தொகை இவர்களின் பராமரிப்புப் பணிகளுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4074/ '13

5\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகளில் ஏற்பட்டுள்ள விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாறான விபத்துக்கள் காரணமாக அங்கவீனமடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விபத்துக்களை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது அடையாளங்காணப்பட்டுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகள் காணப்படுகின்ற இடங்கள் யாவையென்பதையும்;

(ii) அந்தந்த இடங்களில் விபத்துக்களை குறைப்பதற்காக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கு செலவாகும் பணத் தொகை மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள புதிய புகையிரத பாதுகாப்புக் கடவைகள் மற்றும் பாதுகாப்பு மின் சமிக்ஞை முறைமைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பொருத்துதல்கள் மேற்கொள்ளப்பட்ட இடங்கள் யாவையென்பதையும்

(iii) அதற்காக ஏற்கப்பட்ட செலவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4219/ '13

6\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆரம்ப நிலை குடியியல் நீதிமன்றங்களில் தாமத்தை குறைப்பதற்காக 2010, 2011, 2012, 2013 ஆகிய ஒவ்வொரு ஆண்டிலும் நீதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) ஆரம்ப நிலை குடியியல் நீதிமன்றங்களின் வழக்கு விசாரணைகள் குறிப்பிடத்தக்க வேகத்தில் நடைபெறுகின்றனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4340/ '13

7.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின் பழைய சிலாவத்துறை தபால் அலுவலகத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி தபால் அலுவலகம் மேம்படுத்தப்படுமெனில் தற்போது அப்பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்பதையும்;

(iii) தற்போது அப்பிரதேசத்தில் வசிக்கின்ற மக்கள் தபால் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக 17 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள முருங்கன் தபால் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) சிலாவத்துறை தபால் அலுவலகத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4341/ '13

8.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான சபையினால் இலங்கை வங்கியின் சுதந்திர சதுக்கத்திலுள்ள கிளையில், பேணிவரப்படுகின்ற 2323310 ஆம் இலக்க கணக்குக்கு மேலதிகமாக அதே வங்கியில் 2323246 ஆம் இலக்கத்தின் கீழும் கணக்கொன்று பேணிவரப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) 2005.04.15 ஆம் திகதியன்று மேற்படி நிறுவனத்தின் 4530801719 ஆம் இலக்க சாதாரண வங்கிக் கணக்குக்கு அனுப்பப்பட்ட ரூபா 4,293,253.00 பணத் தொகையை 2005.05.03 ஆம் திகதியன்று 004530207663 ஆம் இலக்க வேறொரு கணக்குக்கு மாற்றுவதற்கு மேற்படி நிறுவனத்தின் நிதி முகாமையாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் கட்டளையிட்டுள்ளார் என்பதையும்;

(iii) மேற்படி மேலதிக கணக்கு பற்றிய தகவல்கள் மேற்படி நிறுவனத்தின் வசம் இருக்கவில்லை என்பதால் மேற்படி பணத் தொகை எப்பணிக்காக பயன்படுத்தப்பட்டதென்பது கணக்காய்வின் போது வெளிப்படவில்லை என்பதையும்;

(iv) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள 2323246 ஆம் இலக்க கணக்கு தொடர்பாகவும் எந்தவொரு தகவலும் மேற்படி நிறுவனத்தின் வசம் இல்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2323310 ஆம் இலக்க கணக்குக்கு மேலதிகமாக 2323246 ஆம் இலக்கத்தின் கீழ் மேலுமொரு கணக்கை பேணிவருவதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேலே அ (i) மற்றும் அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு இலக்கங்கள் ஊடாக முறைகேடான நிதிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்ட ஊழல்பேர்வழிகளான உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4407/ '13

9\.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் தற்போது ஆடை உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபடும் கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆடைத் தொழிற்சாலைகளின் சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஆடைத் தொழிற்சாலைகளில் தற்போது அண்ணளவாக 30,000 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றமையை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆடைத் தொழிற்சாலைகளில் நிலவும் வெற்றிடங்கள் இற்றைவரை உள்ளூர் ஊழியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) எதிர்காலத்தில் மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பங்களாதேஷ், இந்தியா, மியன்மார் போன்ற நாடுகளிலிருந்து வெளிநாட்டு ஊழியர்களை வரவழைக்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், இவ்வாறான நிலைமையொன்று தோன்றுவதற்கு ஏதுவான காரணிகள் யாவை என்பதையும்;

(iv) இவ்விதமாக ஆடைக் கைத்தொழில்துறையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வெளிநாட்டு ஊழியர்களை ஈடுபடுத்துவதன் ஊடாக இந்நாட்டின் இளைஞர், யுவதிகளுக்குக் காணப்பட்ட தொழில் வாய்ப்புகளை இழக்க வேண்டி ஏற்படும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4586/ '13

10\.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நுரைச்சோலையை மின் உற்பத்தி நிலையத்தில் பயன்படுத்துவதற்காக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி இறக்குமதி தொடர்பாக, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி இறக்குமதியுடன் தொடர்புபட்ட நிலக்கரியின் அளவை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விடயம் குறித்து ஏன் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேற்படி நிலக்கரித்தொகுதி இறக்குமதியாளரின் பெயர் என்னவென்பதையும்;

(ii) சொல்லப்பட்ட இறக்குமதியாளர் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டார் என்பதையும்;

(iii) இறக்குமதியாளரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்னவென்பதையும்;

(iv) எதிர்காலத்தில் நிலக்கரி இறக்குமதி தொடர்பில் இவ்வாறான நிகழ்வு இடம்பெறுவதைத் தவிர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4629/ '13

11\.

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்தினபுரி புதிய நகர எல்லையினுள் பலாங்கொடை பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் காணப்படுகின்ற ஓரளவு காணிகள், காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட மொத்த காணியின் பரப்பளவு எவ்வளவு;

(iii) பகிர்ந்தளிப்பதற்குள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) இவ்வாறு பகிர்ந்தளிப்பதற்கு உத்தேசமாயுள்ள காணிகளில் ஒரு பர்சஸ் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட காணிப் பங்குகள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு உத்தேசமாயுள்ள ஒவ்வொரு அரச ஊழியரினதும் பெயர், இவர் இறுதியாக வகித்த பதவி மற்றும் கிடைக்கவுள்ள காணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி காணி பெறுனர்களுக்கு மத்தியிலுள்ள குறைந்த வருமானம் பெறும் ஒவ்வொருவரினதும் பெயர், மாதாந்த வருமானம் மற்றும் கிடைக்கவுள்ள காணியின் அளவு வெவ்வேறாக யாது;

(iii) உத்தேச காணி பெறுனர்கள் பணம் செலுத்தியிருப்பின், அவ்வாறு பணம் செலுத்தப்பட்ட கணக்கு மற்றும் அக் கணக்கின் இலக்கம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2507/ '12

12\.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) வட மாகாணத்தின் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள எத்தாவெட்டுனவெவ வித்தியாலயத்தில் பல பௌதீக மற்றும் மனித வளப் பற்றாக் குறைகள் காணப்படுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எத்தாவெட்டுனவெவ வித்தியாலயத்தில் காணப்படுகின்ற பௌதீக மற்றும் மனித வளங்களுக்கான குறைபாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2684/ '12

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியின் எண்ணக்கருவை அவர் விளக்குவாரா?,

(ஆ) (i) இற்றை வரை ஒவ்வொரு தேசத்திற்கு மகுடம் கண்காட்சியிலும் உருவாக்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட தொழில்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இத்தொழில்கள் நிரந்தரமானவையும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவுமா என்பதையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) (i) அனுராதபுர தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு உண்மையிலேயே எச்செலவுத் தலைப்பிலிருந்து பணம் செலவிடப்பட்டது என்பதையும்;

(ii) கடந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்குத் தேவைப்பட்ட ஊழியம் மற்றும் சொத்துக்கள் போன்றவை எந்தவிதக் கொடுப்பனவுமின்றிப் பாவிக்கப்பட்டதா என்பதையும்; உதாரணமாக, ஆயுதப் படை ஆளணியினர் மற்றும் தொழிலாளர்கள் போன்றோரும், இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் போன்றவையும் செலவு ஆக்கக் கூறுகளாக மொத்த செலவுக் கணிப்பீட்டின் போது உள்ளடக்கப்பட்டிருந்தனவா என்பதையும்;

(iii) இன்றேல், குறிப்பிட்ட கண்காட்சிக்கான செலவு எவ்வாறு கணிப்பிடப்பட்டது என்பதையும்;

(iv) எதிர்வரும் மூன்று தேசத்திற்கு மகுடம் கண்காட்சிகளுக்கும் ஏற்படுமென எதிர்பார்க்கின்ற செலவினைத் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3013/ '12

14.

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) ஹ/தங்காலை ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவரொருவர் 2007 ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியன்று தங்காலை பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து அவரது வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுகையில் இடைவழியில் தங்காலையின் அப்போதைய தவிசாளரால் பாரதூரமான விதத்தில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இது தொடர்பாக தங்காலை ஆண்கள் தேசிய பாடசாலையின் மாணவ ஆலோசக ஆசிரியருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் தங்காலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி முறைப்பாடு மேற்படி பொலீஸ் நிலையத்தின் முறைப்பாட்டு இலக்கம் C.W.I.B 127ஆம் பக்கத்தின் 24 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி முறைப்பாட்டின் பிரகாரம் மேற்படி தவிசாளருக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தங்காலை நகரத்தின் ஓய்வுபெற்ற பிரசைகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) ஆமெனில், மேற்படி முறைப்பாடு தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணையை மெற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2559/ '12

15.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2005 தொடக்கம் 2010 வரையான ஒவ்வொரு வருடத்திலும் கல்விக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை அந்த வருடத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெவ்வேறாக எத்தனை சதவீதம் என்பதையும்;

(ii) கல்வித்துறையின் அபிவிருத்திக்காக மேற்கூறியவாறு ஒதுக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதங்கள் இதற்குப் போதுமானதாயுள்ளதா என்பதையும்;

(iii) கல்வித்துறையில் நிலவும் தற்போதைய நிலைமையின்படி அதன் முன்னேற்றத்துக்காக இதை விட கூடுதலான பணத்தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ புத்திக பதிரண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சஹன சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

2.

கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேகா,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஜீவன் குமாரணதுங்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2014 மார்ச்சு 14 ஆம் திகதிய 1853/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.05.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) பந்தியின் கீழ் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2011 நவம்பர் 30 ஆம் திகதிய 1734/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.05.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2006 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறாகன 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) பந்தியின் கீழ் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 நவம்பர் 30 ஆம் திகதிய 1786/26 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.05.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 5.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

குமாரசிறி ஹெட்டிகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

16.

மொஹான் லால் கிரேரு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

17.

விக்டர் அந்தனீ கல்வி, சமூக, பொருளாதார சேவைகள், அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

பண்டு பண்டாரநாயக்க ஹெல ஜன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி பீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

ஹிஸ்புல்லாஹ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

பரீரா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

மிஸ்டிகல் ரோஸ் சர்வதேச நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

ஸ்ரீ லங்கா ஹிரா பௌன்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

இலங்கை எழுத்தாளர்கள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

தாம்பே, மீகொட போதிவர்தனாராம ஸ்ரீ மதுரசாம பிரிவென் விஹாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.